ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2301/44 - 2022 ඔක්තෝබර් මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.10.13

2301/44 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ම/ස/01/ගැම්රජය/ඉ/අත්පත්.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2/2012/HA/291.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மஹர பிரதேச செயலாளர் பிரிவில், அதிகாரி பற்று சிறு பிரிவில், பலிவில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப வரைபட இல. 4292 மற்றும் 2022.05.05 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப் பட்ட 0.0477 ஹெக்டயார் முழு விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் விபரம் பின்வருமாறு :

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: அம்பகஹவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடம் அமைந்துள்ளது; உரிமை கோருவோர்: ரதாவான பலிவில, இல. 82 இல் வசிக்கும் எம். பி. ஜயசேகர மற்றும் இறந்த எம். பி. பேபி சிங்கோவின் வாரிசுகளான எம். பி. கிரிகோரிஸ் அப்புஹாமி மற்றும் ஆர். கே. ரத்நாயக்க; விஸ்தீரணம்: 0.0477 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மஹர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பி. எஸ். ஐ. விமலசேன,
பிரதேச செயலாளர்,
மஹர.

மஹர பிரதேச செயலகம்,
ரமுத்துகல, கடவத்தை.
2022, ஒற்றோபர் 13.

EOG 10 - 0106